# கொள்கை ரீதியாக ஒருமித்து செயற்படுவோம்! தமிழரசுத் தலைவர் சிறீதரன் எம்.பி அழைப்பு

## கூட்டமைப்புத் தலைவரையும் இன்று சந்தித்தார்



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் இன்றையதினம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான இரா. சம்பந்தனைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

நேற்றையதினம் திருகோணமலையில் இடம்பெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலில் சிவஞானம் சிறிதரன் வெற்றியீட்டினார்.

இந்நிலையில் புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட சிறீதரன் நேற்றையதினம் சமயத் தலைவர்கள் மற்றும் கட்சியின் ஆதரவாளர்களைச் சந்தித்து தமது நன்றிகளைத் தெரிவித்ததுடன் மாவீரர்களுக்கும் அஞ்சலி செலுத்தினார்.

அதனையடுத்து அவர் இன்று காலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான இரா. சம்பந்தனை மரியாதை நிமிர்த்தம் நேரில் சென்று சந்தித்துக் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஒன்றிணையுமாறு தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் சகல தமிழ்க்கட்சிகளுக்கும் அவர் அழைப்பு விடுத்தார்.

2 ➤

# மாலைக்கதிர்
Maalaikkathir




சாயல் - 01 வள்ளுவர் ஆண்டு 2054 தை 08 திங்கட்கிழமை 22.01.2024 கதிர் 162

## திருக்கோவில் - வினாயகபுரத்தில் உள்ளூர் ஆயுத உற்பத்தி நிலையம் சுற்றி வளைப்பு

### மூன்று சந்தேக நபர்களும் கைதாகினர்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

திருக்கோவில் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வினாயகபுரத்தில் உள்ளூர் ஆயுதங்கள் தயாரிக்கும் நிலையமொன்றை விசேட அதிரடிப்படையினர் முற்றுகையிட்டுள்ளதுடன் மூன்று சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளனர்.

திருக்கோவில் விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றி வளைப்பின்போது இலங்கையில் பயன்படுத்தப்படும் துப்பாக்கிகள் மீட்கப்பட்டன.

இதேவேளை, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் துப்பாக்கி ஒன்றும் இரும்புக் குழாய்கள் மூன்றும், இரும்பு வெட்டும் இயந்திரம் ஒன்றும், ஒட்டி உருக்கும் இயந்திரம் ஒன்றும் 2 ➤

## சாதாரணதர பரீட்சார்த்திகளுக்கு திணைக்களத்தின் அறிவிப்பு!

2024 ஆண்டிற்கான கல்விப் பொதுத் தராதரப் சாதாரண தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் தொடர்பில் பரீட்சைகள் திணைக்களம் அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது .

இதன்படி நாளை செவ்வாய்க்கிழமை முதல் பெப்ரவரி 15 ஆம் திகதி வரை தமது இணையத்தளத்தில் பரீட்சைக்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும் என பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (04)

## மாத்தறை - பெலியத்தையில் துப்பாக்கிச் சூடு பிரபல அரசியல்வாதி உட்பட ஐவர் உயிரிழப்பு




தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் மாத்தறை - பெலியத்த நுழைவாயிலுக்கு அருகில் இன்று காலை வாகனமொன்றின்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

டிபென்டர் ரக வாகனத்தைக் குறிவைத்து கப் ரக வாகனம் ஒன்றில் வந்த இனந்தெரியாத குழுவினரால் இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூட்டில் நால்வர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த நிலையில், ஒருவர் தங்கல்ல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் துப்பாக்கிச் சூட்டில் அபே ஜனபல கட்சியின் தலைவர் சமன் பெரேராவும் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (04)

## உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்திற்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி இன்று மனுத்தாக்கல்

அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்திற்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி இன்று உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றினைத் தாக்கல் செய்தது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவினால் குறித்த மனு தாக்கல் செய்யப்பட்டது.

இவ்விடயம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த ரஞ்சித் மத்தும பண்டார, தேர்தல்கள் நடக்கவிருக்கும் இந்த காலப்பிரிவில், எதிர்க்கட்சியின் ஜனநாயகத்திற்கு விடுக்கப்பட்ட சவாலே இந்த பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலமாகும்.

யுத்தமொன்று இல்லாத தேர்தல் காலத்திலயே இந்த பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை கொண்டு வந்துள்ளனர்.

பயங்கரவாதத்திற்கான, பயங்கரவாதி யார்? என்பது குறித்தான வரைவிலக்கணம் எதுவும் இந்த சட்டமூலத்தில் குறிப்பிடப்படவில்லை.

எந்த ஒரு நபரையும் கைது செய்வதற்கும், அரசியல் கட்சிகளை ஒடுக்குவதற்கும், இந்நாட்டில் ஜனநாயகத்தை இல்லாதொழிக்கவுமே தேர்தலை எதிர்நோக்கியுள்ள சந்தர்ப்பத்தில் இதை மேற்கொள்கின்றனர்.

இதனாலேயே இந்நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாக்க இச்சட்ட மூலத்திற்கு எதிராக 2 ➤

## கடந்த வருடம் வேலையின்மை 5.2 சதவீதமாக அதிகரித்திருந்ததாக நிதியமைச்சு தெரிவிப்பு

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த வருடம் (2023) இரண்டாம் காலாண்டில் நாட்டில் வேலையின்மை 5.2 சதவீதமாக அதிகரித்திருந்ததாக நிதியமைச்சு வெளியிட்டுள்ள பொது நிதி முகாமைத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, கடந்த ஆண்டின் முதல் காலாண்டில் இலங்கையில் வேலையின்மை 4.7 சதவீதமாக இருந்ததுடன், இரண்டாவது காலாண்டில் அது 5.2 சதவீதமாக அதிகரித்துள்ளது.

மேலும், கடந்த ஆண்டின் இரண்டாவது காலாண்டில், இளம் வயதினரின் (15-24 வயது) வேலையின்மை வீதம் மற்ற எல்லா வயதினரையும் விட 25.8 சதவீதமாக அதிகரித்திருந்தது எனவும், 2 ➤

# காங்கேசன்துறை பொலிஸ் விடுதியில் குடிநீர் சுத்திகரிப்பு தொகுதி திறப்பு

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை பகுதியில் உள்ள பொலிஸ் விடுதியில் குடிநீர் சுத்திகரிப்பு தொகுதி அமைக்கப்பட்டு இன்று திறந்து வைக்கப்பட்டது.

பொலிஸ் திணைக்களத்தின் 20 இலட்சம் நிதிப் பங்களிப்பில் வடமாகாண கடற்படை கட்டளைத் தளபதி ரியல் அட்மிரல் அருண தென்னக்கோனின் தலைமையிலான கடற்படையினரின் தொழில்நுட்ப மற்றும் சரீர ஒத்துழைப்புடன் குறித்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் மஹிந்த குணரத்ன, வடமாகாண கடற்படை கட்டளைத் தளபதி ரியல் அட்மிரல் அருண தென்னக்கோன், யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மஞ்சுள செனரத், காங்கேசன்துறை பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர், காங்கேசன்துறை பிராந்திய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், கடற்படையினர் என பலரும் கலந்துகொண்டனர்.

நீண்டகாலமாக தீர்க்கப்படாது இருந்த குடிநீர் பிரச்சினைக்கு இதன் மூலம் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வடமாகாண கடற்படை கட்டளைத் தளபதி ரியல் அட்மிரல் அருண தென்னக்கோன் இன்றுடன் தனது சேவையில் இருந்து ஓய்வு பெற்றுச் செல்கிறார்.

## வாகன உரிமையை 14 நாட்களுக்குள் மாற்றாவிட்டால் தினசரி அபராதம்!

வாகனம் ஒன்றை கொள்வனவு செய்து 14 நாட்களுக்குள் உரிமையை தங்கள் பெயருக்கு மாற்றாவிட்டால் அபராதம் விதிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

வாகனம் ஒன்றை கொள்வனவு செய்யும் சிலர் பல காலமாக வாகனத்தின் உரிமையை மாற்றாமல் இருப்பதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

கொள்வனவு தினத்தில் இருந்து 14 நாட்களுக்கு பின்னர் உரிமையை மாற்றாத ஒவ்வொரு நாளுக்கும் 100 ரூபா வீதம் அபராதம் அறவிடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (04)

## கடந்த வருடம் வேலையின்மை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொழிலாளர் பங்கேற்பு விகிதம் 48.6 சதவீதமாகக் குறைந்துள்ளது எனவும் மேற்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படிப்படியாக வேகமெடுக்கும் என எதிர்பார்க்கப்படும் பொருளாதார நடவடிக்கைகள் காரணமாக நடப்பு 2024 ஆம் ஆண்டில் இலங்கையில் வேலையின்மை 5 சதவீதத்திற்கும் குறைவாகவே இருக்கும் எனவும் அதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ரெத-48)







## உத்தேச பயங்கரவாத .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனுவை தாக்கல் செய்துள்ளோம்.

ஜனநாயகத்தையும், எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளையும் அடக்குமுறைக்குட்படுத்தவே தேர்தல் வருடமொன்றில் நிகழ்நிலைக் காப்புச் சட்ட மூலத்தையும் இந்த பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்தையும் அரசாங்கம் கொண்டு வருகின்றது, எனவும் தெரிவித்தார். (04)

## திருக்கோவில் - விநாயகபுரத்தில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைப்பற்றப்பட்டுள்ளதாக திருக்கோவில் விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி வருண ஜயசுந்தர தெரிவித்துள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 34, 42 மற்றும் 54 வயதிற்குட்பட்ட திருக்கோவில் மற்றும் கஞ்சிகுடிச்சாறு பிரதேசங்களை சேர்ந்தவர்கள் எனவும் திருக்கோவில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## கொள்கை ரீதியாக ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2009ஆம் ஆண்டுக்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வாறிருந்ததோ அவ்வாறான நிலையை - தமிழ் மக்களின் அரசியல் ஏகபிரதிநிதிகள் என்ற நிலையை- தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு எய்தவேண்டும். எனவே தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் சகல தமிழ்க்கட்சிகளும், தம் கட்சிகளின் நலனை முன்னிறுத்தாமல் மக்கள் நலனை முன்னிறுத்தி தமிழ்த் தேசியத்தின் பாதையில் ஓரணியாக - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக ஒன்றிணையுமாறு அழைக்கின்றேன் - என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

நேற்று திருகோணமலையில் இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் புதிய தலைவருக்கான தேர்தலில் வெற்றிபெற்று புதிய தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்ட சிறீதரன், இந்தத் தேர்தல் தொடர்பிலும் தமிழரசுக் கட்சியின் எதிர்காலப் பயணப்பாடு தொடர்பிலும் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார்.

தமிழ்த் தேசியத்தைப் பலப்படுத்த வேண்டும் என்பதே எனது பெருவிருப்பம். அதனை முன்னிறுத்தியே தமிழரசுக் கட்சியின் தலைமைப்பதவிக்கான போட்டியில் நின்று, இப்போது தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளேன். இந்தநிலையில் தமிழரசுக் கட்சிக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் புத்துயிரூட்டுவதே என் முன்னுள்ள முதற்பணியென எண்ணுகிறேன்.

தமிழ் மக்களின் உரிமைக்காக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக குரல் கொடுத்த, மக்களுக்காக அரசியல் பணி செய்த சக தமிழ்த்தேசியக் கட்சிகள் சிலபல காரணங்களால் பிரிந்து தனிவழியே பயணிக்கின்றன. இது எமது பொது எதிரிக்கே சாதகமானது. அதன் விளைவை கடந்த தேர்தல்கள் எமக்கு உணர்த்தியிருந்தன.

2009 க்கு முன்னர் கூட்டமைப்பு எப்படி தமிழ் மக்களின் அசைக்கமுடியாத சக்தியாக மிளிர்ந்ததோ, அதே நிலையை மீண்டும் எட்டவேண்டும் என்பதே தமிழ் மக்களின் பெருவிருப்பம். எனது விருப்பமும் அதுவே. இப்போது அதற்கான காலம் கனிந்துள்ளது. இதற்காக அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளையும் கடந்தகால கசப்பான நினைவுகளைக் களைந்து ஒன்றிணையுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

தமிழ் மக்களின் நலனுக்காகவும் தமிழ்த் தேசியத்தின் நலனுக்காகவும் ஓரணியில் ஒன்றித்திருப்பது எம்முன்னால் உள்ள பெரும்பொறுப்பு. அதற்காக தமிழரசுக் கட்சி மட்டுமல்லாது, சகல தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஓரணியில் திரண்டு உழைக்கவேண்டும்.

சகல தமிழ்த் தேசியக்கட்சிகளையும் ஒன்றிணைக்கும் செயற்பாட்டை துரிதகதியில் முன்னெடுக்கவுள்ளேன். அதன் மூலம் மக்களின் உரிமைகளையும், மாவீரர்களின் கனவுகளையும் வென்றெடுப்போம் - என்றார் அவர். (02)

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்
உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# கல்முனை ஆதார வைத்தியசாலையில் வைத்திய நிபுணருக்கு பிரியாவிடை



(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை, ஜன. 22

கல்முனை ஆதார வைத்தியசாலையின் இருதய நோய் சத்திர சிகிச்சை நிபுணர் டொக்டர் கே.டி. லொகுகெடகொட இடமாற்றம் பெற்று செல்வதனையிட்டு பிரியாவிடை நிகழ்வு கடந்த 16 ஆம் திகதியன்று வைத்தியசாலையின் கேட்போர் கூடத்தில் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர். இரா. முரளீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

வைத்திய நிபுணர்கள், இருதய நோய் சத்திர சிகிச்சை நிபுணர் கே.டி லொகுகெடகொட அவர்களுடன் பணியாற்றிய அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். இதனை தொடர்ந்து வைத்தியசாலையின் பணிப்பாளர், பிரதிப்ணிப்பாளர், வைத்திய நிபுணர்கள், உத்தியோகத்தர்கள் ஊழியர்களினால் டொக்டர் கே.டி.லொகுகெடகொடவுக்கு மாலை அணிவித்து, பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னமும் வழங்கப்பட்டு கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வைத்தியசாலையின் பிரதிப்பணிப்பாளர் ஜெ.மதன், மகப்பேற்று வைத்திய நிபுணர் எச்.எம்.ரசீன் மொகமட், பொது வைத்திய நிபுணர் எம் என் எம். சுவைப், சிறுபிள்ளை வைத்திய நிபுணர் எஸ் என்.ரொஷாந்த், விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு பொறுப்பு வைத்தியர் பா.சுரேஷ்குமார், சத்திர சிகிச்சைக்கூடப் பொறுப்பு வைத்தியர் எம் எஸ் ஏ. ஷிரோஷான், வெளிநோயாளர் பிரிவு பொறுப்பு வைத்தியர் ஆர். கணேஷ்வரன், கணக்காளர் எம். கேந்திரமூர்த்தி, தாதிய பரிபாலகர் என்.சசிதரன், நிர்வாக உத்தியோகத்தர் ரி. தேவஅருள் வைத்தியசாலையின் இருதய நோய் பிரிவு வைத்திய அதிகாரிகள், பொறுப்பு தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்களும் கலந்துகொண்டனர்.

# திருகோணமலை மாவட்டத்து ஊடகவியலாளர் ஒன்று கூடல்



(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர்களுக்கான ஒன்று கூடல் வைபவம் ஒன்று நேற்று சர்வோதய மண்டபத்தில் இடம் பெற்றது. இதனை அகம் மனிதாபிமான வளநிலையம் ஏற்பாடு செய்திருந்தது.

இக்கட்டான கால சூழ்நிலையில் பணியாற்றிய சிரேஷ்ட ஊடகர்களின் அனுபவப் பகிர்வும் இதன்போது இடம் பெற்றதுடன், கடந்த யுத்த காலகட்டத்தில் திறம்படப் பணியாற்றிய ஊடகவியலாளர்களின் பணி பற்றியும் நினைவுகூரப்பட்டது. 2024 ஆம் ஆண்டுக்கான அகம் அமைப்பின் நாட்காட்டிகளும் இந்த நிகழ்வில் வழங்கி வைக்கப்பட்டன.

இதில் அகம் மனிதாபிமான வளநிலையத்தின் இணைப்பாளர் கண்டுமணி லவகுசராசா உட்பட சுமார் 30க்கும் உட்பட்ட பிரதேச ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.

# அக்கரைப்பற்று கிராம அலுவலர்களுக்கு நிருவாக உத்தியோஸ்தர் பதவியேற்பு



(எம்.ஏ.ஏ.அக்தார்)

பொத்துவில் பிரதேச செயலகத்தில் கிராம சேவகராகப் பணிபுரிந்து, கிராம அலுவலகர்களுக்கான நிர்வாக உத்தியோகத்தராக பதவியுயர்த்தப்பட்ட எஸ்.எம்.எம்.நஸீரின் பதவி ஏற்பு நிகழ்வு அண்மையில் அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் ரீ. எம்.எம்.அன்சார் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பொத்துவில் பிரதேச செயலாளர் எம்.ஐ. பிர்னாஸ், அக்கரைப்பற்று உதவிப்பிரதேச செயலாளர் வை.ராசித், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஏ எம் எம் தமீம் , கணக்காளர் சர்தார் மிர்சா , முன்னாள் கிராம சேவை உத்தியோகத்தர்களுக்கான நிர்வாக உத்தியோகத்தர் எம் எம் தாகீர் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.




# மண்முனைப் பற்றில் தைப்பொங்கல் விழா





(அஸ்ஹர் இப்றாஹிம்)

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனைப்பற்று பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பொங்கல் விழா பிரதேச செயலாளர் திருமதி தெட்சணகௌரி தினேஷ் தலைமையில், மாவிலங்கன்துறை கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள மண்முனை ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய வளாகத்தில், வயல் அறுவடை பாரம்பரிய நிகழ்வுகளுடன் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக கிளை ரீதியாக பல வகையான பொங்கல் பானைகளால் நிகழ்வை அலங்கரித்தனர்.

இதன்போது ஆலய பிரதம குரு மகேந்திரராசா ரஜீவனின் ஆசியுரையுடன் நிகழ்வுகள் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

உதவிப் பிரதேச செயலாளர் திருமதி. லோகினி விவேகானந்தராஜ், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி மனோரஞ்சனி ஜெயச்சந்திரன், கணக்காளர் வல்லிபுரம் நாகேஸ்வரன், நிருவாக உத்தியோகத்தர் சின்னத்துரை திவாகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தொடர்ந்து மாவிலங்கன்துறை ஸ்ரீ சித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலை, ஶ்ரீ பத்திரகாளியம்மன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நடன நிகழ்வுகள், உடுக்கு இசை, பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் உழவர் பாடல், கிராமியப் பாடல், என பல கலை நிகழ்வுகளும் பொங்கல் விழாவைச் சிறப்பித்ததிருந்தன.

மண்முனைப்பற்று பிரதேச செயலகத்துடன் இணைந்து மாவிலங்கன்துறை கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள மண்முனை பகுதி ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலயம், கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், விளையாட்டுக் கழகம், முதியோர் சங்கம், மீனவர் சங்கம், ஹெயார் நுன்நிதிச் சங்கம் என பல அமைப்புக்கள் இணைந்து இந்நிகழ்வினை முன்னெடுத்திருந்தன.

# இந்திய ஹெலிகொப்டரை பயன்படுத்த அனுமதி மறுப்பு மாலைதீவில் சிகிச்சை தாமதத்தால் சிறுவன் உயிரிழப்பு

மாலைத்தீவில் உடல்நிலை பாதிக்கப்பட்ட 13 வயது சிறுவனை இந்திய ஹெலிகொப்டரில் அழைத்து செல்ல அனுமதி வழங்க அந்நாட்டு அதிபர் முய்ஸு தாமதித்ததால் அந்த சிறுவன் உயிரிழந்ததாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

காஃபு அட்டோலைச் சேர்ந்த 13 வயது சிறுவனுக்கு உடல் நிலை திடீரென மோசமடைந்துள்ளது. இதையடுத்து, இந்திய அரசு வழங்கிய ஹெலிகொப்டர் மூலம் அந்த சிறுவனை மாலேயில் உள்ள உயர் மருத்துவ மனைக்கு கொண்டு செல்ல அனுமதி கோரப்பட்டது. இந்த விவகாரத்தில் மாலைதீவு அரசு மிகவும் தாமதம் காட்டியுள்ளது.

இதையடுத்து, சரியான நேரத்தில் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டுசெல்லமுடியாததால் அந்தச் சிறுவன் உயிரிழந்ததாக கூறப்படுகிறது. இதையடுத்து, அரசின் தாமதமே சிறுவனின் உயிரிழப்புக்கு காரணம் என்று சிறுவனின் பெற்றோர்கள் குற்றம் சாட்டியுள்ளனர் - இவ்வாறு அந்த ஊடக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்திய ஹெலிகொப்டர்களை பயன்படுத்தவில்லை என்ற விமர்சனத்திற்கு மாலைதீவு பாதுகாப்பு அமைச்சர் முகமட் கசான் தனது சமூகவலைத் தளத்தில் கூறிய பதிலில், மருத்துவ உதவிகளுக்கு 93 சதவீதம் மாலைதீவு விமானங்கள் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. அவசர கால மருத்துவ நடைமுறைகளுக்கு அதிபரின் அனுமதி பெறவோ அல்லது அவருக்கு தகவல் தெரிவிக்கவோ தேவையில்லை என்பது விதி. மாறாக அந்தப் பணியானது சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் ஒருங்கிணைப்பைச் சார்ந்தது, என்று தெரிவித்துள்ளார்.

அவசர மருத்துவ சிகிச்சை மற்றும் பேரிடர் காலங்களில் மீட்பு நடவடிக்கைகளுக்காக இரண்டு ஹெலிகொப்டர் மற்றும் ஒரு டோர்னியர் விமானத்தை மாலைதீவுக்கு இந்தியா வழங்கியுள்ளது.

மாலைதீவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான மோதல் வலுத்து வருவதாகக் கருதப்படும் நிலையில் சிறுவனின் மரணம் முக்கிய பேசுபொருளாகியுள்ளது.

சீனாவின் ஆதரவாளராக கருதப்படும் மாலைதீவின் புதிய அதிபர் முகமட் முய்ஸு அங்கிருக்கும் இந்திய அதிகாரிகளை மார்ச் 15 ஆம் திகதிக்குள் வெளியேறுமாறு கெடு விதித்துள்ளார்.



இந்த நிலையில், இந்திய ஹெலிகொப்டர்கள், விமானங்கள் பயன்பாட்டையும் அதிபர் தவிர்ப்பதாக தற்போது குற்றச்சாட்டு எழுந்துள்ளது. (04)

# தென்மேற்குச் சீனாவில் நிலச்சரிவு இருவர் பலி - பலரை காணவில்லை



தென்மேற்கு சீனாவின் மலைப்பகுதியான யுனான் மாகாணத்தில் இன்று காலை திடீரென நிலச்சரிவு ஏற்பட்டது. இந்த நிலச்சரிவில் சிக்கி 40க்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர்.

அப்பகுதியில் வசித்த 200க்கும் மேற்பட்டவர்கள் உடனடியாக வெளியேற்றப்பட்டனர்.

புதையுண்ட 47 பேரும் 18 வெவ்வேறு வீடுகளைச் சேர்ந்தவர்கள் என மீட்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

அவர்களை மீட்பதற்கான முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும், காணாமல் போனவர்களில் 2 பேர் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

33 தீயணைப்பு வாகனங்கள் மற்றும் 10 இயந்திரங்களுடன் 200க்கும் மேற்பட்ட மீட்புப் பணியாளர்கள் காணாமல் போனோரைத் தேடும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அவர்களைத் தேடி மீட்குமாறு சீன அதிபர் ஷி ஜின்பிங் உத்தரவிட்டுள்ளார். (04)

# கே-பாப் பார்த்த இரு சிறுவர்களுக்கு 12 ஆண்டுகள் கடின வேலை செய்யும் தண்டனையை விதித்த வட கொரியா



தென் கொரியாவின் புகழ்பெற்ற கே-பாப் நிகழ்ச்சிகளைக் கண்டு ரசித்த குற்றத்துக்காக தங்கள் நாட்டைச் சேர்ந்த 2 சிறுவர்களுக்கு 12 ஆண்டுகள் கடுமையான வேலை செய்யும் தண்டனையை வட கொரிய அரசு விதித்திருப்பது சர்வதேச அளவில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

16 வயதே நிரம்பிய இரண்டு சிறுவர்கள் தென் கொரிய பாப் இசை, சினிமாவைக் கண்டு ரசித்ததற்காக தண்டிக்கப்பட்ட வீடியோ வெளியாகியுள்ளது.

வட கொரியா பல ஆண்டுகளாகவே தென் கொரியாவுடன் எந்த விதத்தில் தொடர்பு ஏற்படுத்தினாலும் சொந்த மக்களைத் தண்டிக்கும் போக்கைக் கொண்டுள்ளது. கடந்த 2020 ஆம் ஆண்டு இதற்காக பிரத்யேக சட்டத்தைக் கொண்டுவந்தது. தென் கொரிய பொழுதுபோக்கு அம்சங்களை ரசிப்பதை தடை செய்யும் சட்டம் அது. அந்தச் சட்டத்தின்படியே அந்த இரண்டு சிறுவர்களுக்கும் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வட கொரியாவில் இருந்து கடந்த 2001 ஆம் ஆண்டு வெளியேறி ஜப்பானில் தஞ்சமடைந்து, அங்குள்ள டோக்கியோ பல்கலைக்கழகத்தில் அரசியல் அறிவியல் துறையில் பேராசிரியராக இருக்கும் முனைவர் சோய் க்யோங் ஹூய் கூறுகையில், "இது போன்ற கடுமையான தண்டனையை அளித்ததன் மூலம் ஒட்டுமொத்த வட கொரிய மக்களுக்கும் அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது. தென் கொரிய கலாசாரம் வட கொரியாவில் ஊடுருவி வருவதை இது உறுதிப்படுத்துகிறது.

இந்த வீடியோ 2022 இல் எடுக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதுகிறேன். ஜென் எக்ஸ் தலைமுறையினர் அவர்கள் சிந்திக்கும் போக்கை மாற்றியுள்ளனர். அது கிம் ஜோங் உன் கட்டமைத்துள்ள வட கொரிய சிந்தனையை எதிர்ப்பதாக உள்ளது. இது கிம்மை கவலையில் ஆழ்த்தியுள்ளது. அதனாலேயே அவர் இத்தகைய தண்டனைகளை அமல்படுத்துகிறார்" என்று தெரிவித்துள்ளார்.

தண்டனை தொடர்பாக வெளியாகியுள்ள வீடியோவில் ஓர் அரைவட்ட திறந்தவெளி அரங்கில் பழுப்பு நிற உடையணிந்த 2 சிறார்கள் கைகள் கட்டப்பட்டு அழைத்து வரப்படுகிறார்கள். அரங்கில் 1000 சிறார்கள் அமர்ந்திருக்கின்றனர். அவர்கள் அனைவரும் முகக்கவசம் அணிந்திருக்கின்றனர். இதுவே அந்த வீடியோ கொரோனா காலத்தில் எடுக்கப்பட்டிருக்கலாம் என்பதை உணர்த்துகிறது.

அப்போது ஒருவர் தண்டனையை அறிவிக்கிறார். அவர்கள் இருவரும் வெளிநாட்டுக் கலாசாரத்தால் ஈர்க்கப்பட்டதால் வாழ்க்கையை அழித்துக் கொண்டார்கள் என அவர் கூறுகிறார். (04)

# பல்கலைக்கழகத்தை தகர்த்தது இஸ்ரேல் விளக்கம் கோருகிறது அமெரிக்க அரசு

இஸ்ரேல் மீது ஹமாஸ் தீவிரவாதிகள் கடந்தாண்டு ஒக்டோபர் 7 ஆம் தகதி தாக்குதல் நடத்தினர். இதனால் காசா மீது இஸ்ரேல் போர் தொடுத்தது. இந்த சண்டையில் இஸ்ரேல் தரப்பில் இதுவரை 1,140 பேரும், காசாவில் 24,620 பேரும் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், காசாவில் உள்ள பாலஸ்தீன பல்கலைக்கழக வளாகம் குண்டு வைத்து தகர்க்கப்படும் வீடியோ காட்சி சமூக ஊடகங்களில் வைரலாக பரவியுள்ளது.

கட்டிடத்துக்குள் வைக்கப்பட்டிருந்த குண்டுகள் வெடித்துச் சிதறுவதுபோல் அந்த வீடியோ காட்சி உள்ளது.

ஆட்கள் இல்லாத இந்தக் கட்டிடத்தை தகர்த்தது குறித்து இஸ்ரேலிடம் அமெரிக்கா விளக்கம் கேட்டுள்ளது.

காசாவுக்கு எதிரான போரில் இஸ்ரேலுக்கு தேவையான ஆயுதங்கள் மற்றும் வெடி பொருட்களை அமெரிக்கா வழங்கி வரும் நிலையில், கைவிடப்பட்ட பல்கலைக்கழக வளாகத்தை தகர்த்தது ஏன்? என அமெரிக்கா கேள்வி எழுப்பியுள்ளது. (04)



# கற்பிட்டி ஸ்ட்ரேபோட் சர்வதேச பாடசாலையில் வீட்டுத்தோட்டம்



(கற்பிட்டி செய்தியாளர் சியாஜ்)

கற்பிட்டி ஸ்ட்ரேபோட் சர்வதேச ஆங்கில பாடசாலையில் வீட்டுத்தோட்டம் அமைத்தல் தொடர்பான விழிப்புணர்வை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்தும் நோக் பாடசாலையின் சுற்றாடல் முன்னோடிகளால் பாடசாலை வளாகத்தினுள் வீட்டுத்தோட்டம் அமைக்கும் பணி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கற்பிட்டி ஸ்ட்ரேபோட் சர்வதேச ஆங்கில பாடசாலையின் அதிபர் எம்.ஆர் பேகம் றம்ஸானியின் ஆலோசனைக்கு அமைய, சுற்றாடக் குழு பொறுப்பாசிரியர்களின் ஒத்துழைப்புடன் மிகவும் அழகிய முறையில் உருவாக்கப்பட்டுள்ள இந்த வீட்டுத்தோட்டம் பாடசாலை மாணவர்கள் மத்தியில் மிகவும் வரவேற்பை பெற்றுள்ளதாகவும் ஆர்வத்துடன் இந்தத் திட்டத்தை அவர்கள் முன்னெடுப்பதாகவும் பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

# சைக்கிளிங் கீறீன் அமைப்பு நாவலடியில் மரநடுகை



(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஹப்பி எயிட் அமைப்பினரால் சைக்கிளோட்ட வீரர்களை உள்ளடக்கிய சைக்கிளிங் கிறீன் உறுப்பினர்களை வரவேற்று, அவர்கள் மூலமாக பள்ளிவாசல் வளாகத்தில் மரநடுகை நிகழ்வும் சைக்கிளிங் கிறின் கழகத்தினால் பாடசாலைகளுக்கும் அமைப்புக்களும் நூல்களும் வழங்கும் நிகழ்வுகளும் அண்மையில் நாவலடி மஸ்ஜிதுன் நூர் பள்ளிவாசலில் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தன.

இந்த மர நடுகை நிகழ்வில் சைக்கிளிங் கிறீன் கழக அங்கத்தவர்களுடன் மருதமுனையைச் சேர்ந்த சட்டத்தரணி எம்.எம்.எம். முபீன், எம்.ஐ.எம். உவைஸ் (வருமானவரி உதவி ஆணையாளர்), யூ.எல். ஜவாஹிர் (கணக்காளர்), எஸ்.எம். றம்ஸ ீன் (தென் கிழக்கு பல்கலைக்கழக உத்தியோகத்தர்), றிஸ்கான் சாபி (முகாமைத்துவ பணிப்பாளர், றய்னா நிறுவனம்), எம். ஜெளபி (பிரபல தொழிலதிபர்), எம்.ஐ. அறபாத் (பிரபல தொழிலதிபர்), எஸ்.எம். /ஹைசைன் (இ.போ.ச) , ஹெப்பி எய்ட் சார்பில் றிப்கான் றபாய்தீன், ஹரிஸ் முகம்மட், ஹஸ்மிர் றபீக் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரி கல்விசாரா உத்தியோகத்தர் மேலங்கி அறிமுகம்

அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரியின் கல்விசாரா உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கத்தினால் 2024 ஆம் ஆண்டுக்கான மேலங்கி அறிமுகமும் அதனை கையளிக்கும் நிகழ்வும் இன்று, கல்வியியற் கல்லூரி வளாகத்தில் இடம்பெற்றன.

பீடாதிபதி சட்டத்தரணி கே.புண்ணியமூர்த்திக்கான டிசேர்ட்டினை பதிவாளர் எம். ஜிப்ரி, சங்கத்தின் தலைவர் ஏ.புஷ்பராஜா, செயலாளர் கே.சாதுலன், பொருளாளரும் ஊடகவியலாளருமான எம்.ஜே.எம். சஜீத் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களும் இணைந்து வழங்கி வைத்தனர்.



(படம்: எம்.ஏ.றமீஸ்)

# காத்தான்குடி முஸ்லிம் பெண்கள் காப்பகத்தினால் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கௌரவிப்பு




(எம்.எம்.றம்ஸீன்)

பாதிக்கப்பட்ட, பராமரிப்பற்ற, கைவிடப்பட்ட நிலையில் உள்ள முஸ்லிம் சிறுமிகள், பெண்கள் மற்றும் வயோதிபப் பெண்களை பராமரித்துவரும் காத்தான்குடி முஸ்லிம் பெண்கள் காப்பகத்தினால் புதிதாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபராக நியமனம் பெற்ற திருமதி ஜஸ்ரினா ஜூரேக்கா முரளிதரனைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை காப்பகத்தில் நடைபெற்றது. மட்டக்களப்பு மாவட்ட செயலாளராக நியமனம் பெற்றுள்ள திருமதி ஜே.ஜே.முரளிதரன் நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

காத்தான்குடி முஸ்லிம் பெண்கள் காப்பகத்தின் தலைவி திருமதி சல்மா ஹம்ஸா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் காத்தான்குடி உதவி பிரதேச செயலாளர் எம்.எஸ். சில்மியா, நகர சபை செயலாளர் எம். ஆர்.எப்.ரிப்கா ஷபீன், பிரதேச கல்விப் பணிப்பாளர் ஏ.ஜீ.எம்.ஹக்கீம், அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் அஷ்ஷேய்க் ரீ.எம்.எம்.அன்சார் (நளீமி) மற்றும் காப்பகத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், பள்ளிவாயல் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது மாவட்ட செயலாளரிடம் காப்பகத்தின் பணிப்பாளர் சபையினால் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.






## கிண்ணியா செம்பி மோட்டையில் யானை தாக்கி விவசாயி மரணம்



(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா வான்எல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செம்பி மோட்டை வயல் நிலப் பகுதியில் யானை தாக்கியதில் விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்று மாலை இடம் பெற்றுள்ளது.

வயல் காவலுக்கு சென்றவரையே இவ்வாறு யானை தாக்கி உயிரிழந்துள்ளதாக ஆரம்ப கட்ட விசாரனை மூலம் தெரியவருகிறது.

வட்டமடு, ஆயிலியடி எனும் முகவரியை சேர்ந்த 8 பிள்ளைகளின் தந்தையான அப்துல் சரீப் முஹம்மது ஏகூப் வயது (67) என்பவரே இந்தத் தாக்குதலில் உயிரிழந்துள்ளார்.

தற்போது நெற்செய்கை அறுவடைக் காலம் நெருங்கிய நிலையில் தனது விவசாய நிலத்தை பாதுகாப்பதற்காக சென்றவரே யானை தாக்குதளுக்கு இலக்காகியுள்ளார்.

குறித்த சம்பவ இடத்துக்கு திடீர் மரண விசாரனை அதிகாரி எம்.எஸ்.ஷாபி சென்று உயிரிழந்தவரின் ஜனாசாவை பார்வையிட்டு வாக்கு மூலத்தைப் பதிவு செய்தார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரனைகளை வான் எல பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

இப்பகுதியில் பாதுகாப்பற்ற யானை வேலி அமைக்கப்பட்டும் அது, செயலற்றும் முறையற்ற நிலையிலும் காணப்படுகிறதாகவும், தங்களுக்கு விவசாயத்தை தவிர வேறு தொழில்கள் தெரியாது எனவும், விவசாய நிலங்களை இரவு வேளைகளில் பாதுகாக்க முறையான தரமான வேலிகளை அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுப்பதாக இப்பகுதி விவசாயிகள் தெரிவித்தனர்.

## கொத்தணிக் குண்டுத் தாக்குதல் உக்ரைனில் 25 பேர் உயிரிழப்பு



ரஷ்ய ஆக்கிரமிப்பு உக்ரைன் நகரமான டொனட்ஸ்கில் நடத்தப்பட்ட கொத்தணிக் குண்டுத் தாக்குதலில் 25 பேர் உயிரிழந்ததாக உள்ளூர் நிர்வாக அதிகாரிகள் நேற்று தெரிவித்தனர்.

டொனட்ஸ்கின் புகர் சந்தையில் நடைபெற்ற இந்தத் தாக்குதலில் 2 குழந்தைகள் உள்பட 20க்கும் அதிகமானோர் காயமடைந்தனர் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

இந்தத் தாக்குதலை உக்ரைன் ராணுவம் நடத்தியதாக ரஷ்யா குற்றஞ்சாட்டியுள்ளது. ஆயினும், இந்தச் சம்பவம் குறித்து உக்ரைன் தரப்பில் எவ்வித தகவலும் தெரிவிக்கப்படவில்லை. (04)


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD DRIVER APP:
GET IT ON Google Play
Download on the App Store
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!